RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt2143

OPEN ACCESS

# ஒப்பீட்டு நோக்கில் அறம் - புறநானூறு மற்றும் ஷிழ்சிங்

**வீ. காளத்தி [அ, *], ர. சுரேஷ் [அ]**

[அ] ஆசிய ஆய்வுகள் பள்ளி, பெய்ஜிங் வெளிநாட்டு ஆராய்ச்சிப் பல்கலைக்கழகம், பெய்ஜிங், சீனா.

[அ] மொழிகள் துறை, கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர்-641021, தமிழ்நாடு, இந்தியா

# A comparative approach to the Morality of Purananuru and Shi Jing

**V. Kalathi [a, *], R. Suresh [a]**

[a] School of Asian Studies, Beijing Foreign Studies University, Beijing-100089, China

[a] Department of Languages, Karpagam Academy of Higher Education, Coimbatore-641021, Tamil Nadu, India

* Corresponding Author: kalathitamizh@gmail.com

Received: 31-05-2021
Revised: 21-08-2021
Accepted: 22-08-2021
Published: 26-08-2021

Check for updates

**ABSTRACT**

This article compares the data on 'Aram' found in two classics, Purananuru in Tamil and Shi Jing (诗经) in China. In both the collections, it is learnt that the messages of morality are the nucleus. By comparison, we can see how savants are considered to be prominent in society, how their unbiased ideas have been presented to the states of that time and how they have been developed into ethical values. Thus, it is possible to see from comparison that literature originating in two different lands has some similarities and some differences in ethical ideas.

**Keywords:** Aram, Purananuru, Chinese, Tamil.

## முன்னுரை

ஒப்பிலக்கியம் குறித்து ஹென்றி எச். எச். ரிமார்க் அவர்களின் கருத்தானது இங்கு நோக்கத்தக்கது. “ஒப்பிலக்கியம் என்பது ஒரு குறிப்பிட்ட நாட்டின் எல்லைகளுக்கு அப்பால் விளங்குகிற பிறிதொரு நாட்டின் இலக்கியங்களை ஒப்பிட்டு ஆராய்வதாகும். இலக்கியத்தை மனித அறிவின் பிற துறைகளான ஓவியம், சிற்பம், கட்டடக்கலை, இசை முதலிய கவின் கலைகளுடனும் தத்துவம், வரலாறு ஆகியவற்றுடனும் சமூக அறிவியல்களான அரசியல், பொருளாதாரம், சமூகவியல் போன்றவற்றுடனும் ஒப்பிட்டு இலக்கியத்திற்கும் இவற்றிற்கும் உள்ள தொடர்புகளைக் கண்டறிவதாகும்’ (Tirumalai, 2010). சிந்தனையாளர்களின் சமூகத் தன்மைகளை இரு செவ்விலக்கியங்களை ஒப்பாய்வு செய்வதின் மூலமாக இரு சமூகங்களுக்கும் இடையில் சில பொதுக்கூறுகள் இருப்பதை வெளிக்கொணர முனைகின்றது. இலக்கிய ஒப்பாய்வின் மூலமாக உலகப் பொதுமையை அடைய இயலும் என்ற ஒப்பிலக்கிய அறிஞர்களின் கருத்துரைகளை இம்மாதிரியான ஒப்பாய்வுகளின் ஊடாக மெய்ப்பிக்கலாம்.

உலக இலக்கிய வரலாற்றை நோக்கும் போது தமிழ் இலக்கியத்துக்கு என்று தனித்த இடமுண்டு. தமிழில் சங்க இலக்கிய காலம் முதல் தற்காலம் வரையில் எண்ணற்ற இலக்கிய வகைமைகளில் நூல்கள் தோற்றம் பெற்றுள்ளன. இவை பாக்களாலும், பாடுபொருள்களாலும் பல்வேறு வகைமைகளைத் தன்னகத்தே கொண்டவையாக உள்ளன. தமிழ் மொழியானது காலமாற்றத்திற்கு ஏற்ப பல்வேறு வகைப்பட்ட பாடுபொருள்களைக் கொண்டுள்ளது. தமிழ் இலக்கியத்தில் அறம் என்பது பரவலாக காணப்படுகின்றது. சங்க காலத்திற்குப் பிறகு அறிமுகமான சமணம், பௌத்தம் போன்றவைகளும் சமயக் கருத்துக்களையும்

அறக்கருத்துக்களையும் தமிழ்ப் பகுதிகளில் அறிமுகம் செய்துள்ளன. இதனை அறத்தைப் போதிக்கும் நோக்கத்துடன் தோன்றிய சங்கம் மருவிய கால இலக்கியங்களின் வழியாக அறிந்து கொள்ள முடிகின்றது. சங்க இலக்கியங்களில் அகம், புறம் ஆகிய இரு வேறுபட்ட பாக்களின் வகைப்பாடுகள் இருப்பினும் அறங்களைக் கூறும் பாடல்கள் புறநானூற்றில் பரவலாக பாடப்பட்டுள்ளமையைக் காணமுடிகின்றது.

சீன இலக்கியத்திலும் அறம் சார்ந்த கருத்துக்கள் காணப்படுகின்றன. சீனாவின் செவ்விலக்கியங்களாகக் கருதப்படும் ஐவகைத் தொகை நூல்களில் அறம் குறித்த பதிவுகள் இருக்கின்றன. சீன இலக்கியமும் நீண்ட வரலாற்றையும் இலக்கிய வகைமைகளையும் கொண்டதாக இருக்கின்றது. செவ்விலக்கிய கால இலக்கியத் தோற்றம் முதல் தற்காலம் வரையிலும் தொடர்ச்சியான இலக்கிய உருவாக்கத்தைக் கொண்டதாக உள்ளது இதன் தனிச்சிறப்பாகும். மனித நாகரீகம் சமூக நிலையிலிருந்து நிலைபெற்று வாழத் தொடங்கிய காலத்தை முதலில் அறிமுக அளவில் காண்போம். சீனச் சமூகத்தில் நாகரீகம் அற்ற நிலையிலிருந்து நாகரீகம் பெற்ற பரிணாம நிலையை ஷாங் வம்சம் ஆட்சி புரிந்த காலத்திலிருந்தே தொடங்கிவிட்டதைச் சார்லஸ் கொங் பதிவு செய்கிறார் (Kwong, 2003). கி.மு. 14 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதலே வேளாண்மையைக் கொண்டு நிலைபெற்று வாழ்ந்த வரலாற்றைக் கூறுகின்றார். ஷாங் காலத்தின் சான்றோர் உரைகளில் நெற்பயிர், தானியங்கள், வாற்கோதுமை, மொச்சைக்கொட்டை, சோளம் போன்றவை உதாரணங்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. வேளாண்மை நிலைபெற்ற காலம் முதல் இயற்கையை வழிபடுதல் என்பதும் தோற்றம் பெறுகின்றது.

ஷிழ் சிங் நூலில் வானுலகத்தையும், அரசர்களையும் வணங்குவதைப் பாடல்களின் வழியாக அறிய முடிகின்றது. பழைய கற்காலம் (சி. 3, 000, 000 – 2, 00, 000) ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மனித குலத்தில் பொருளாதார நிலையில் மாற்றம் பெற்று வந்துள்ளதைச் சார்லஸ் கொங் குறிப்பிடுகின்றார் (Kwong, 2003) உணவு சேகரிப்பு, வேட்டையாடுதல், வேளாண்மை எனும் படிநிலைகளில் இருந்த இனக்குழுச் சமூக அமைப்பு நிலையிலிருந்து கட்டமைக்கப்பட்ட அரச முறையானது உருவாகத் தொடங்குகின்றது. இதற்கான சான்றுகளை ஷிழ் சிங் நூலின் ஊடாகக் காணமுடிகின்றது. உணவு சேகரிப்பு (213), வேட்டையாடுதல் (282), வேளாண்மை (291) போன்ற சான்றுகள் ஷிழ் சிங் பாடல்களில் காணப்படுகின்றன. இதற்கு அடுத்த நிலையில் நிலையாக வேளாண்மையைக் கொண்டு வாழ்ந்தவர்களின் வாழ்நிலையில் ஏற்பட்ட மாற்றங்களையும் காணமுடிகின்றது. சார்லஸ் கொங் கூறும் போது உழைப்பவர்கள் ஆள்பவர்களுக்கு எதிராகக் கலவரத்தை ஏற்படுத்தியதற்கான சான்றுகள் இருப்பதாகவும் குறிப்பிடுகின்றார் (Kwong Charles. 2003). இவ்வாறாக அடக்கு முறைக்கு ஆட்பட்டவர்கள் ஆள்பவர்களுக்கு எதிராகச் செயல்பட்டதற்கான குறிப்புக்களைத் தருகின்றார். சார்லஸ் கொங் வேளாண்மை சார்ந்த வாழ்வியல் தன்மையில் பஞ்சம் ஏற்பட்ட போது வேறு பகுதிகளுக்குக் குடியேறியதைப் பற்றியும் கூறுகின்றார்,

“வடக்கிலுள்ள மெய்ப்பொருள் நோக்கிச் செல்வோம்,

முதலில் நீர் வழிப்பாதைகளைத் தயார்படுத்துவோம்,

கால்வாய்களை ஏற்படுத்தி நிலத்தைச் செழுமைச் செய்வோம்!

மந்திரசக்தியால் வறட்சியை துரத்துவோம்” (Payani, 2012).

இவ்வாறாக இனக்குழு நிலையில் ஒரு அமைப்பு மற்றொரு இடத்திற்கு வாழ்வாதாரத்தை மையப்படுத்தி இடம்பெயர்ந்த நிலையைக் குறிப்பிட்டுள்ளார். வேட்டையாடுதல், உணவு சேகரித்தல், வேளாண்மை என்ற நிலைகளின் அடுத்ததாக அரசு அமைகின்றது. இப்பொழுது நிலைபெற்ற அரசுக்கு உறுதுணையாக இருந்தவர்களில் முக்கியமானவர்கள் புலவர்கள். புலவர்கள் அரசுக்கு உறுதி பயக்கும் கருத்துகளைக் கூறி வழிப்படுத்தினர். ஆ. வேலுப்பிள்ளையின் கருத்து இவ்விடத்தில் நோக்க வேண்டியது அவசியமாகும். அவருடைய கூற்றுப்படி வாணிபத்தின் ஊடாக வேறு நிலப்பகுதிகளில் இருந்து வந்தவர்கள் மூலமாகவும் அறம் சார்ந்த கருத்துக்கள் பரவலாயின என்பதாகும். தனிநாயகம் அடிகளார் ‘The philosophic stage of development in Sangam Literature’ என்ற கட்டுரையில் தமிழ் நிலப்பகுதிகளில் வேறு தத்துவங்கள் மூலமாகக் கருத்துக்கள் பரப்பப்பட்ட முறையினை விளக்குகின்றார். புலவர்கள் இக்கருத்துப் பரப்புதலில் முக்கியமானவர்களாக இருந்துள்ளனர் என்பதைக் குறிப்பிடுகின்றார். யவனர்கள், புத்த மதத்தினர், சமண

மதத்தினரின் கருத்துக்கள் தமிழ் நிலப்பகுதியை அடைந்துள்ளதை இக்கட்டுரையில் குறிப்பிட்டுச் செல்கின்றார் (Thani Nayagam, 1995).

புறநானூற்றில் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் பற்றிய பாடலில் (2) பாண்டவர்கள் பற்றிய குறிப்பும், பாண்டியன் இலவந்திகை துஞ்சிய நன்மாறனைப் பற்றிய பாடலானது (56) யவனர்களைப் பற்றிய குறிப்பையும் தருகின்றது. மேலும் பெரும்பாணாற்றுப்படை (316-317), அகநானூறு (149), பதிற்றுப்பத்து இரண்டாம் பத்து – பதிகம், முல்லைப்பாட்டு (61), நெடுநல்வாடை (101) போன்ற பல இடங்களில் வேறு நிலப்பகுதியினரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. வாணிபம் சார்ந்த பதிவுகளாக இருக்கின்றனவே அன்றி அறம் அல்லது மற்ற கருத்துக்களைப் பதிவு செய்த தரவுகள் கிடைத்த தரவுகளின் அடிப்படையில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. கருத்துப் பரவலானது நிகழ்ந்திருப்பதற்கான வாய்ப்புகள் இருந்திருக்கலாம்.

## அறம் - விளக்கம்

செய்திகளின் பொருண்மை என்று பொருள் கொள்ளலாம். சமுதாயம் நல்லெண்ணம் கொண்ட செயல்களும் தீய விளைவுகளை உண்டாக்கும் செயல்களும் நடக்கும் களமாக உள்ளது. அறக்கருத்துக்கள் நல்லெண்ணத்துடன் செயல்முறைப்படுத்தும் விளைவுகளையே முதன்மைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு பாடப்பட்டுள்ளன. தீய விளைவுகள் ஏற்படுவதற்குக் களமாக இருப்பவைகள் இரண்டு காரணிகள் எனலாம். ஒன்று மனம், மற்றொன்று மனத்துக்கு உருவம் தரும் புற உலகம். இவ்வுலகத்தில் நடைபெறும் செயல்கள் பெரும்பாலானவற்றுக்கு மூலகாரணம் மனம் என்பதால் புறநானூற்றில், உள்ள பாடல்கள் மனத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளைக் கூறி நற்செயல்களைச் செய்வதற்கான அறிவுரையைப் பிறருக்குப் பகர்கின்றன. அறம் என்னும் சொல்லுக்குப் பல பொருள்கள் இருக்கின்றன.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியில் பத்து வகையான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. அவை முறையே தருமம், புண்ணியம், தகுதியானது, சமயம், நாணம், அறச்சாலை, நோன்பு, தீப்பயன் உண்டாக்கும் சொல், தருமதேவதை, யமன் என்பவைகளாகும் (University of Madras, 1982). சமூகம் நன்னெறியுடன் இருப்பதற்கான செயலாக்கத்தைத் தருபவைகளே அறங்களாகும். மனிதர்கள் நல்வாழ்க்கையை மேற்கொள்வதற்கு அறங்களின் கருத்துக்கள் துணைபுரிகின்றன. இவ்விடத்தில் இல்லறத்தின் பொருட்டு துணைகொள்ள வேண்டிய கருத்துக்களைக் குறித்துப் பல்வேறு தகவல்களைத் தந்துள்ளன.

அறம் என்பதற்கான விளக்கத்தை கோவி. இராசகோபால் தரும் விளக்கம் பின்வருமாறு "அறம் என்ற சொல் ஒழுக்கம், பழக்கம், பண்பாடு, நீதி முதலான பல சொற்களின் பொருள்களைக் குறிக்கிறது. இது 'மாரல்' (moral), 'எதிக்' (ethic) என்ற ஆங்கிலச் சொற்களின் பொருளைத் தருகிறது. 'தர்மம்' என்ற சமஸ்கிருதச் சொல்லின் நேரடியான பொருளை வழங்குகிறது. குடும்ப வாழ்வும் சமுதாயப் பொது வாழ்வும் சீராக இயங்க, ஒருவர் கடைப்பிடிக்கும் ஒழுக்கக் கண்ணோட்டத்துடன் கூடிய நெறிமுறைகள் மற்றும் மேற்கொள்ளும் கடமைகள் யாவும் அறமே ஆகும். தனிமனிதனால் கடைப்பிடிக்கப்பெற்ற ஒழுக்கங்கள் – மேற்கொள்ளப்பட்ட கடமைகள் சிலவோ/பலவோ பின்னர்க் காலப்போக்கில் பலதரப்பட்ட மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அவை இறுதியில் சாசுவத/சாசனத் தகுதியைப் பெறுகின்றன. தனிமனித அளவில் கொள்கைகளாக இருந்த இவை, பின்னர்ச் சமுதாய அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிலைபெறும் போது கோட்பாடுகள் என ஆகின்றன" (Arivunambi et al., 2007) மேற்குறிப்பிட்ட விளக்கத்தை உற்று நோக்கும் போது சமூகத்தில் அறம் எவ்வாறு நிலைத்த தன்மையைப் பெற்றது என்பதை விளங்கிக்கொள்ள முடிகின்றது.

## புறநானூற்றில் அறம் குறித்து இடம்பெற்றுள்ள பதிவுகள்

புறநானூற்றில் இடம் பெற்றுள்ள 65 துறைகளில் அறத்தைக் கூறும் துறைகளாக இருப்பவற்றைப் பின்வருமாறு மருதநாயகம் கூறுகிறார். அவை செவியறிவுறூஉ, துணை வஞ்சி, பெருங்காஞ்சி, பொருண் மொழிக் கஞ்சி, முதுமொழிக் காஞ்சி போன்ற துறைகளைப் மருதநாயகம் குறிப்பிடுகிறார் (Maruthanayakam, 2004). இத்துறைகளில் இடம்பெற்றுள்ள பாடல்களில் கூறப்படும் அறக்கருத்துக்களை அட்டவணை 1-யில் விளக்கமாகக் காணலாம்.

அட்டவணை 1. அறம் பற்றிக் கூறும் புறநானூற்றுத் துறைகள்

| வ. எண் | புறநானூற்றுத் துறைகள் | துறையில் இடம் பெற்றுள்ள பாடல் எண்கள் |
|---|---|---|
| 1. | செவியறிவுறூஉ | 2, 3, 5, 6, 35, 40, 55, 184. |
| 2. | துணை வஞ்சி | 36, 45, 46, 47, 57, 213. |
| 3. | பெருங்காஞ்சி | 194, 356, 357, 359, 360, 362, 363, 364, 365, 366. |
| 4. | பொருண்மொழிக் கஞ்சி | 24, 75, 121, 182, 183, 185, 186, 187, 188, 189, 190, 191, 192, 193, 195, 214. |
| 5. | முதுமொழிக் காஞ்சி | 18, 27, 28, 29, 74. |

மேற்கண்ட ஐந்து துறைகளில் மொத்தம் 45 பாடல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பாடல்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம். அமைச்சர்கள் தங்களுடைய கடமையில் இருந்து விலகாதவர்களைக் குறித்து பாடப் பெற்றுள்ளது. இம்முறை எவ்வாறு என்றால் நான்கு வேதங்களும் தங்களுடைய நெறியில் இருந்து மாறினாலும் இவர்கள் நெறி தவறா பண்பைப் பெற்றவர்கள் என்று இப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. இதற்கு உதாரணமாகப் பால் ஆனது தன்னுடைய இயல்பு நிலையில் இருந்து திரிந்தாலும், சூரியனுடைய ஒளி இழந்து உலகம் இருளில் ஆழ்ந்தாலும் அரசர்கள் தங்களுடைய கடமையில் இருந்து வழுவாத உறுதியை உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. புலவர் முரஞ்சியூர் முடினாகராயர் சேர மன்னனைப் பாடிய வரிகள் பின்வருமாறு,

"பாஅல் புளிப்பினும், பகல் இருளினும்,

நாஅல் வேத நெறி திரியினும்,

திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி,

நடுக்கின்றி நீலியாரோ அத்தை, அடுக்கத்து" (புறம், 2: 17-20)

இவ்வுலகம் தன்னுடைய நிலையில் இருந்து திரிந்து மாற்றம் பெற்றாலும் பண்பு நலன்களில் இருந்து பிறழாத பாண்டியனின் குணநலன்களை எடுத்தியம்பும் பாடலின் எண்: 3 ஆகும். சொல் தவறாமையைக் குறித்துப் புலவர் இரும்பிடர்த் தலையார் பின்வருமாறு கூறுகிறார்,

"நிலம் பெயரினும் நின் சொற் பெயரல்

பொலம் கழற்காற் புலர் சாந்தின்

விலங்கு அகன்ற வியன் மார்ப!" (புறம், 3: 14-16)

தாய் தன்னுடைய கடைமையையும், சமூகத்தில் அங்கம் வகிக்கும் மற்றவர்களுடைய கடைமைகளையும் கூறுவதாக அமைந்த பாடல் பின்வருமாறு. பொன்முடியார் எனும் புலவர் புறநானூற்றில் மூன்று பாடல்களை எழுதியுள்ளார். அவை 299, 310, 312 என்பனவாகும். இதில் 312 – ஆம் பாடலில்தான் சமூகத்தில் வாழும் அங்கத்தினருக்கு உரிய கடைமைகளைக் கூறும் வகையில் எழுதப்பெற்றுள்ளது. முதல் வரியே தாய் தன்னுடைய கூற்றாகக் கூறும் முறையில் பாடல் தொடக்கம் பெறுகின்றது. மொத்தம் ஆறு வரிகளைக் கொண்டதாக இப்பாடல் அமைந்துள்ளது. மகனைப் பெற்றுக் கொடுத்தல் பெண்ணினுடைய கடைமை என்று கூறுகிறார். இரண்டாம் வரியானது தந்தையின் கடைமையைக் கூறுகின்றது. இப்பகுதியில் பெற்ற புதல்வரைச் சான்றோன் ஆக்க வேண்டிய பொறுப்பானது தந்தைக்கு உரியது என்பதாக உள்ளது. மூன்றாவது வரியானது தொழிலை மேற்கொள்ளும் கொல்லனைப் பற்றி கூறுகின்றது. வேலினைச் செய்துக் கொடுத்தல் என்பது கொல்லர்களின் பணியாகும் என்று மூன்றாம் பகுதியில் குறிப்பிடப்பெற்றுள்ளது. தாய், தந்தை, கொல்லன் அதற்கு அடுத்த நிலையில் அரசனின் கடைமையைக் கூறுகிறது. அப்புதல்வனை ஒழுக்கம் நிறைந்தவனாக உருவாக்குவது வேந்தனுக்கு உரிய கடைமையாகும் என்று அமைந்துள்ளது. இறுதியாக நான்கு பேரால் வளர்த்தெடுக்கப்பட்ட புதல்வனுக்கு உரிய கடைமையைக் கூறுகிறது. அப்புதல்வன் கையில்

வாளை ஏந்திப் போர்க்களத்தில் உள்ள யானைகளை வீழ்த்தி வெற்றியோடு திரும்பி வருதல் என்பது புதல்வனுக்கு உரிய கடமையாக இப்பாடல் முற்றுப் பெறுகின்றது.

இப்பாடல் உணர்த்தும் செய்தியானது தாய், தந்தை, கொல்லன், வேந்தன் முதலியோருக்கு உரிய கடைமைகளைக் கூறுகிறது. பொன்முடியார் ஒரு புதல்வனைக் குறித்து மட்டுமே இப்பாடலில் பாடியுள்ளார். வீரனுக்கு உரிய தன்மையை இந்நிலத்தில் பிறக்கும் குழந்தைக்கு உண்டாக்குவதையே தன்னுடைய நோக்கமாகக் கொண்டு பாடலைப் பாடியுள்ளார். பிறக்கும் மனிதர்கள் யாவருக்கும் இலக்கு என்பது வீரன் என்று போற்றுவதையே முக்கியமானதாகக் கொண்டிருந்த சூழ்நிலையை உடைய சமூகத்தில் எழுதப்பட்டுள்ள இப்பாடல் முக்கியமானதாகும். பொன்முடியாரின் மற்ற இரண்டு பாடல்களான 299, 310 ஆகிய இரண்டுமே வீரனின் சிறப்பை உணர்த்தும் தன்மையில் எழுதப்பெற்றுள்ளது. 312 என்ற எண் கொண்ட இப்பாடல் மட்டும்தான் சமூகத்தில் உள்ளோருக்கான கடைமைகளை இவையிவை என்று வகுத்துக் கூறுகின்றன. (Swaminatha Iyer, 2014)

ஆடவர் அதாவது ஆளும் தகுதியை உடையவர்களைப் பற்றிய பாடலானது ஔவையாரால் (பாடல் எண்:187) எழுதப்பெற்றுள்ளது. இப்பாடலானது பொதுவியல் என்ற திணையையும், பொருண்மொழிக் காஞ்சி என்ற துறையினையும் கொண்டுள்ளது. இப்பாடலின் பொருளை ஔவையார் பின்வருமாறு பதிவு செய்துள்ளார். ஒரு நிலப்பகுதியானது நாடாக இருக்கட்டும் அல்லது காடாகவோ, பள்ளமாகவோ, மேடாகவோ இருக்கட்டும் அவை முக்கியமில்லாதவை. ஆனால் அடுத்த நிலையில் கூறும் செய்தியானது முக்கியத்துவம் உடையது. ஆடவர் என்று குறிப்பிடப்படும் அரசர் அல்லது அப்பகுதியை ஆளும் தகுதியை உடையவர் நல்லவராக இருப்பதைப் பொறுத்துதான் அந்நிலப்பகுதியானது சிறப்புடன் விளங்கும் என்று கூறுகிறார்.

இவ்வுலக வாழ்வானது துன்பம் நிறைந்தது என்பதைப் பல்குடுக்கை நன் கணியார் என்ற புலவர் எழுதிய பாடல் (194) விளக்குகின்றது. இவரால் பாடப்பட்ட பாடல் இது ஒன்றுதான் என்பது இதன் பொருள் ஆழத்திற்கான சான்றாக உள்ளது. இவ்வுலகின் இயல்பு நிலையை உணர்ந்தவர்கள் முக்தி எனும் நிலையை அடைய வேண்டிய வழியை நாட வேண்டும் என்பதாகக் கூறுகிறார். இதற்கு காட்டாக மூன்று நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுகிறார். அவையாவன; ஒரு இல்லத்தில் இறந்தவரின் இறுதிச் சடங்கில் முழங்கும் மேளத்தின் ஓசைக் கேட்பதையும்; மற்றொரு இல்லத்தில் முன்னதைப் போன்று மேளம் முழங்குகின்றது, ஆனால் மணம் நிகழும் பொழுதாக உள்ளதையும்; இறுதியாக மனையில் கணவனை இழந்த மனைவி துன்பம் மிகுதியால் கண்ணீருடன் வாடுவதையும் சுட்டிக் காட்டுகிறார். புலவரின் பாடற்பொருண்மை இறுதி வரிகளில்தான் காணமுடிகின்றது. மேற்கண்ட மூன்று நிகழ்வுகளுக்கும் காரணமாகிய இவ்வுலகைப் படைத்தக் கடவுள் பண்பு அல்லாதவனாக இருக்கின்றான். எனவே இவ்வாழ்க்கைத் துன்பங்கள் நிறைந்தது, இதனை விடுத்து இன்பத்தைத் தரும் முக்தியை நல்கும் வழியை மேற்கொள்ள வேண்டும் என்பதாகப் பாடல் பொருள் தருகின்றது (Avvai Duraisamy Pillai, 1968).

## ஷிழ் சிங் நூலில் அறம் குறித்து இடம்பெற்றுள்ள பதிவுகள்

ஷிழ் சிங் நூலில் அறம் குறித்து இடம்பெற்றுள்ள பாடல் எண்கள்: 8, 11, 12, 13, 18, 20, 26, 31, 32, 33, 37, 40, 41, 44, 45, 46, 49, 52, 55, 56, 58, 65, 68, 71, 75, 102, 103, 108, 109, 112, 114, 115, 120, 121, 122, 134, 135, 138, 148, 155, 163, 164, 165, 166, 183, 189, 192, 193, 194, 195, 196, 198, 199, 200, 202, 203, 205, 206, 207, 219, 220, 223, 224, 230, 249, 251, 253, 254, 255, 256, 257, 258, 264, 265, 266, 267, 274, 288, 289, 300 (Payani, 2012).

'மரம் வெட்டுதல்' (பாடல் எண்: 112) என்ற தலைப்பிலான பாடல் நாட்டுப் பாடல் வகையைச் சார்ந்ததாகக் கூறப்படுகின்றது. ஏழை விவசாயக் குடியானவர்கள் தங்களுடைய மனநிலையை வெளிப்படுத்தும் பொருண்மையைக் கொண்டதாக உள்ளது. தானியங்களை விதைத்தல், பராமரித்தல், அறுவடை செய்தல் போன்ற எவ்விதப் பணிகளையும் செய்யாதவர்களின் மீதான பாடலாக இருக்கின்றது. பிரபுக்குலத்தினரைக் குறித்துச் சீனர்கள் தொன்மைக் காலத்தில் கொண்டுள்ள எண்ணங்கள் இப்பாடலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பாடலானது மரத்தை வெட்டி அவற்றை மேட்டு நிலத்தில் அடுக்கும் நிகழ்வுடன் துவங்குகின்றது. குழுவாகப் பணியை மேற்கொள்ளும் உழைப்பவர்கள் அலுப்புத் தீருவதற்காக பாடிய பாடலாகும். எல்லாவிதமான பணிகளையும் மேற்கொள்ளும் உழைப்பாளிகள் நிலங்களுக்குச்

சொந்தக்காரர்களான பிரபுக்குலத்தினரைச் சாடுகின்றனர். தானியம், கிடாக்கறி, காடை, கோழி போன்ற யாவற்றையும் உழைக்காமலேயே பிரபுக்குலத்தினர் பெறுவதைக் கூறுகின்றது.

"விதைப்பதுமில்லை, அறுப்பதுமில்லை

மூவாயிரங்கோடித் தானியம் மட்டும் குவிவது எப்படியாம்?

விரட்டுவதுமில்லை, வேட்டையுமில்லை

வீட்டுமுற்றத்தில் வளர்ந்த கிடாக்கறி தொங்குவதெப்படியாம்?

அந்தப் பிரபுக்குல ஐயாமாரோ,

தண்டக்கூழே குடிப்பதில்லையே!" (Payani, 2012)

இப்பாடலில் மரம் வெட்டுபவர்கள் தங்களுக்குள் எழும் கேள்விகளைக் கேட்பதாய் அமைந்துள்ளது. வாழ்க்கையில் நிலவிய ஏற்ற இறக்கங்களைக் குறித்து கவலையுடன் வினவுவதாய் இருக்கின்றது. இப்பாடல் சீனச் சமூகத்தில் நிலவிய சமூக முரண்பாடுகளை விளக்குவதாய் உள்ளது. பிரபுக்குலத்தினரைச் சாடுவதாய் இப்பாடலின் பொருளானது இருக்கின்றது.

ஷிழ் சிங் நூலில் 'தேவதாருப் படகு' என்ற தலைப்பிலான பாடல் இருவேறுபட்ட கருத்தாடல்களுக்கு இடம் தருவதாய் இருக்கின்றது. ஒன்று இப்பாடலின் பொருளானது தலைவன், தலைவி இருவரில் ஒருவரது மன நிலையைப் பற்றியதாய் உள்ளது. மற்றொன்று ட்சு யுஆன் (கி.மு. 340 - 278) மன்னனின் மனவெதும்பலாய் இருப்பதாகவும் கூற்று நிலவுகின்றது. இவ்விடத்தில் காணத்தகுவது பெயர் ஏதும் இப்பாடலில் குறிப்பிடப்படவில்லை என்பது முக்கியமானதாகும். இப்பாடலில் பயின்று வந்திருக்கும் செய்திகள் பின்வருமாறு. தனக்கு அண்ணன், தம்பி ஆகியவர்களுடன் கூடிய உறவினர்கள் பலர் இருந்தும் தன்னுடைய மன வேதனைகளைப் பிறரிடம் பகிர்ந்து கொள்ளாத மனத்தினராய் இருக்கின்றார். தன்னுடைய பண்பு நலன்களில் குறை ஏதும் இன்றி வாழ்கின்ற வாழ்க்கைக்கு அர்த்தம் இன்றி இருப்பதாய்ப் புலம்புகின்றார். இப்பாடலில் இருந்து உறவினர்களின் அன்புக்கு ஏங்குதல், பண்பு நலனில் குறைவின்றி வாழ்வதற்கு முற்படுதல் ஆகிய இரண்டைக் குறித்தும் விவாதிக்கலாம்.

நாகரிகத்தின் ஊடாக மனித சமுதாயம் கற்றுக்கொண்டது வாழ்க்கையை எவ்வாறு செம்மையாக நடத்திச் செல்ல வேண்டும் என்பதாகும். அவ்வாறு முன்னோர்களின் வழியைப் பின்பற்றிச் செல்வதன் மூலமாக நன்மைகள் சேரும் வாழ்வை அடையமுடியும். அப்படிபட்ட முன்னோர்களைப் பின்பற்றும் கருத்தை மையமாகக் கொண்டதுதான் 'கல்லறை வாசல்' எனும் பாடலாகும். இப்பாடலின் எண்: 141 ஆகும். கல்லறை வாசலில் முட்புதர்கள் பரவி இருப்பதை விவரிக்கின்றது. அப்புதர்களை அகற்றி நம்முடைய முன்னோர்களுக்கு மரியாதை தெரிவிக்க வேண்டும் என்று கூறுகின்றது. மனிதர்களில் எல்லோரும் நல்லவர்களாக இருப்பது என்பது காணமுடியாத ஒன்றாகும். இவ்வுலகத்தில் நிலைபெற்று வாழவேண்டும் என்று கருதுபவர்கள் இந்த உயரிய விழுமியத்தை அறிந்தவர்களாக உள்ளனர். ஆனால், கல்லறையைச் சுத்தம் செய்ய பணிக்கப்பட்டவன் அவனுக்குரிய செயலைச் செய்வதற்குத் தவறிவிட்டவனாக இருக்கின்றான். அவ்வாறு செயல்களைச் செய்யாமல் தவறிவிடுவதன் மூலமாக நமக்குரிய சமூக மதிப்பை இழந்து விடுவோம் என்று வருந்தும் நபராகவும் இல்லை. மனிதர்களில் நல்லவர்கள் வெகு அரிதாகவே இருக்கின்றார்கள் என்று பாடல் கூறுகின்றது.

## புறநானூறு, ஷிழ் சிங் - ஒப்பீடு

சான்றோர்கள், ஆள்பவர்களுடன் நெருங்கி உறவாடுவதனால் பல ஆடம்பரங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். ஆள்பவர்கள் செய்யும் தவறுகளைப் பொருட்படுத்தாமல் விட்டுவிடுதல், தவறுகளைச் சுட்டிக் காண்பிக்காமல் தவிர்த்தல், முதலான செயல்களைச் செய்வதன் மூலமாக இன்பமான வாழ்க்கையை வாழச் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஆனால் அக்காலச் சான்றோர்கள் இத்தகைய இழிவான செயல்களுக்காகத் தங்களின் அறிவை அடகு வைக்கும் நிலைக்குச் செல்பவர்களாக இருந்திலர். அவர்கள் தங்களின் சிந்தனைக்கு முரணாகத் தோன்றும் எந்த ஒன்றையும் நுட்பமான அறிவினாலும் தெளிவான,

துணிவான செய்கைகளாலும் எடுத்து இயம்பியுள்ளனர். இப்பகுதிக்கான மூலக் கருத்து வடிவமானது ஷிழ் சிங்கின் தமிழ் மொழிபெயர்ப்பான 'கவித்தொகை' எனும் நூலிலிருந்து வடிவம் பெற்றது.

புறநானூற்றின் கோவூர் கிழாரின் பாடலில் சோழன் குளமுற்றுத் துஞ்சிய கிள்ளிவளவன் என்ற மன்னனிடம், மலையமான் என்பவனின் மகன்களைக் கொல்லுதல் மன்னனின் குடிக்கு இழுக்காகும் என்கிறார். மலையமானின் மக்களும் நல்ல குடியில் பிறந்தவர்களே என்கிறார். கிள்ளவளவனின் சிறப்பைப் பாடலின் முதல் பகுதியில் பின்வருமாறு விவரிக்கிறார்,

"நீயே புறவின் அல்லல் அன்றியும், பிறவும்

இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை" (புறநானூறு, 46: 1 - 2)

கிள்ளிவளவன் புறாவின் துன்பம் மட்டுமின்றி, பிற உயிர்களின் துன்பத்தையும் போக்கிய சோழர்களின் வழித்தோன்றலைச் சார்ந்தவன். அவ்வாறு இருக்க உன்னுடைய குடிக்கு இழுக்கு ஏற்படும் என்று கருதினால் இந்தச் செயலைச் செய்தலைத் தவிர்த்தல் வேண்டும் என்கிறார். அச்சிறுவர்கள் தங்களைக் கொல்லவரும் யானையைக் கண்ட நேரத்தில் அழுகையை மறந்து அந்த யானையை இரசித்தவர்கள். அவர்களைக் கொல்வது சிறந்த செயலாகாது என்கிறார்.

சீனப் பாடலின் கருத்தும் ஒரு வகையில் பொருண்மை அடிப்படையில் இப்புறநானூற்றுப் பாடலுடன் பொருந்துகின்றது. பெயர் குறிப்பிடப்படாத சீன மன்னன் நாட்டின் நன்மையை எண்ணும் ஒருவரின் மீது பழி சுமத்தும் போலிகளை நம்புவதாக இப்பாடல் அமைந்துள்ளது. அம்மன்னன் அவ்வாறு போலிச் சிந்தனையாளர்களின் சொல்லைக் கேட்டு நாட்டை வழிநடத்துவானேயானால் நாட்டு மக்கள் துன்பங்களைச் சந்திக்க நேரிடும் என்கிறார் நாட்டின் நலனைக் கருதும் சிந்தனையாளர். அம்மன்னனுக்கு அறிவுரை வழங்கும் வரிகள் பின்வருமாறு,

"பரிபாலிக்கும் இளவரசே,

நிந்திப்போர் சொல் நம்பாதே" (Payani, 2012)

சாணிவண்டுகள் என்பதானது போலிச் சிந்தனையாளர்களுக்கு உவமையாக இங்கு கூறப்படுகிறது. சாணிவண்டுகள் ஒட்டுண்ணி வகை உயிரினத்தைச் சார்ந்தவை. மனிதர்களுக்கு ஏற்படும் புண்களில் கூட வசிக்கும் திறம் பெற்றவை. அவைகள் வாழ வேண்டும் என்பதற்காக எச்செயலையும் செய்பவை. அவைகளைப் போன்றவர்கள் உன்னுடன் இருக்கும் போலிச் சிந்தனையாளர்கள். எனவே அத்தகையோரின் சொற்களைக் கேட்டு ஆட்சி செய்தால் நாட்டுக்கும் உனக்கும் இழப்பு நேரிடும். எனவே அவர்களின் சொற்களைக் கேட்காமல் நாட்டை நற்சிந்தனையாளர்களின் துணை கொண்டு ஆட்சி செய்வாயாக என்று மொழிகிறார் நற்சிந்தனையாளர். புறநானூறும், கவித்தொகையும் இயற்கையுடன் இயைந்த மனித வாழ்வியலைச் செய்யுள்களாக வடித்துக் காட்டும் இலக்கியங்களாகும். செய்யுள்களின் வழியாகக் காணும் வாழ்வியல் என்பது அம்மக்களின் வாழ்க்கைச் சூழல் வழியே கருப்பெற்றதாகும். மனித சமூகத்தைச் சூழ்ந்திருக்கும் சூழ்நிலைகள் மனிதனின் எண்ணங்களுக்கு உருக்கொடுக்கவும், அவர்களின் சிந்தனையைப் புனைவுத் தன்மையுடன் பிறருக்குக் கூறவும் பயன்படுகின்றன. தொன்மைக்காலத்தில் நிகழ்ந்தவற்றைத் தற்காலத்தவரும் அறியும் வகையில் செய்திகளைத் தரும் இத்தகைய இலக்கியங்கள் வரலாற்று ஆவணங்களாக இருக்கின்றன.

புறநானூற்றுப் பாடலின் கருத்தும் ஷிழ் சிங்கின் கருத்தும் சிந்தனையாளர்களின் திறத்தைக் கூறுவதில் ஒத்துள்ளன. சமூகத்தை அதன் நீரோட்டத்தில் சிறிதும் பிறழாமல் நடத்திச் செல்ல வேண்டியக் கடப்பாடு சிந்தனையாளர்களுக்கு இருந்துள்ளது என்பதை இப்பாடல்கள் வலியுறுத்துகின்றன.

## முடிவுரை

அறம் என்பது சமூகத்தின் நியதிக்கு உட்பட்டவைகளை ஆதரிப்பதாக இருப்பதைப் பாடல்களின் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது. தமிழில் காணப்படும் திணை, துறை போன்றவை சீனத்தில் இல்லை. உரிமைகளையும் கடமைகளையும் அரசுக்கு ஆதரவாக வடிவமைக்கும் பணியைப் புலவர்கள் மேற்கொண்டுள்ளனர். சமூகத்தில் ஒழுங்கமைவை நிலைநிறுத்துவதற்குத்தான் இலக்கியங்கள்

பயன்பட்டிருப்பதுடன் அமைப்பை எதிர்க்கும் கருத்துக்களும் இழையோடிக் கலந்திருப்பதைச் செவ்வியல் காலச் சமூகங்கள் பிரதிபலிக்கின்றன. இரு தொன்மை வாய்ந்த சமூகங்களின் இத்துணை நீண்ட வளர்ச்சிக்கு ஒரு வகையில் சிந்தனையாளர்கள் பணி செய்துள்ளனர் என்பது இவ்வொப்பாய்வின் மூலம் தெளிவாகின்றது. அவ்வகையில் சிந்தனையாளர்களின் அறிவுரைகள் இன்றியமையாதவையாகும். மேலும் நுட்பமாகவும் விரிவாகவும் இவ்விரு செவ்விலக்கியங்களை ஒப்பிடுவதின் மூலம் பல அரிய புதிய செய்திகளைப் பெறலாம்.

## References


Arivunambi, A., Madhiyazhagan, M., Saravanan, N.J., (Edi.) (2007), Sanga Ilakiyangalum Kotpadugalum, Supramani Bharathiyar Thamizhiyarpulam, Pudhucherry, india.

Avvai Duraisamy Pillai, Su., (1968) Purananuru, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Kwong, C., (2003), Nature and Religion in Ancient History, Journal of Asian History, 37 (1), 33-69.

Maruthanayakam, P., (2004) Pudhupaarvaiyil Purananooru, Kaavya Pathippagam, Chennai, India.

Payani, (2012), Kavitokai: Varich Chootinum Parpavarillai (Cheenavin Sanga Ilakiyam), Kalachuvadu Publications, Chennai, India.

Swaminatha Iyer, U.V., (2014), Purananooru Moolamum Uraiyum, U.Ve.Sa, Noolaga nilayam, Chennai, India.

Tirumalai, M, (2010), Opilakiyam Kolgaikalum Payilmuraigalum, Sellapa Pathipagam: Madurai, India.

University of Madras, (1982), Tamil Lexicon, Volume III, University of Madras, Madras, India.

Thani Nayagam, X.S., (1995), Collected Papers of Thani Nayagam Adigal, International Institute of Tamil Studies, Chennai.

Xu Yao Chong, (1992), The Book of Songs, Hunan Publishing House, Hunan, China.



**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License